# தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்

பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.

தலைமை இடம் - சென்னை.

| K.சந்திரசேகரன் | R.சந்திரசேகரன். | E.சித்தையன் |
|---|---|---|
| தலைவர் | பொதுச்செயலாளர் | நிதிச்செயலாளர் |

Union Office : Hall No.7,M.L.D.C.Building TNEB COMPLEX, Anna salai, Chennai – 600 002.


சுற்றறிக்கை எண்.4-2018 நாள் : 19.03.2018

அன்புடையீர்

வணக்கம். 1.12.2015 முதல் மின்சாரத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு ஒப்பந்தம் 22.02.2018 அன்று கையெழுத்தாகி அதனை அமுல்படுத்த வாரிய உத்திரவுகளும் 02.03.2018-ல் வழங்கப்பட்டு விட்டன.

மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கான புதிய சம்பளம் 02.04.2018-ல் வழங்கப்படவுள்ளது.

பணியில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வழங்கப்படுவதைப் போல, ஓய்வூதியர்களுக்கும் 2.57 மடங்கு ஓய்வூதிய உயர்வும், வங்கியில் 02.04.2018-ல் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

01.10.2017 முதல் 28.02.2018 வரையான 5 மாத கால ஊதிய உயர்வு மற்றும் ஓய்வூதிய உயர்வு நிலுவைத்தொகைகளை வழங்குவதற்கான நிதி ஆதாரத்திற்கு, வாரியம் முழு வீச்சுடன் செயல்பட்டு வருகிறது.

ஊதிய உயர்வு பெறுவதற்கு முன்பே தனது ஊதிய உயர்வுத் தொகையை கணக்கிட்டு, ரூ.19,454-ஐ, தலைமை நிதி கட்டுப்பாட்டு அலுவலகத்தில் கணக்கு மேற்பார்வையாளராகப் பணியாற்றும் நமது சங்க உதவிப் பொதுச்செயலாளர் திரு.T. தயாளன் அவர்கள், 15.03.2018 அன்று தலைவர், பொதுச்செயலாளரிடம் நன்கொடையாக வழங்கியுள்ளார் என்பதையும், நமது சங்கத்தின் வேலூர் வட்டப்பொறுப்பாளர்கள் 11 பேர் தங்களது ஒரு மாத ஊதிய உயர்வினை சங்கத்திற்கு நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இதே போன்ற ஒரு சங்கப்பிடிப்பு இதர பகுதிகளிலும் தொடரும் என நம்புகிறோம். சங்கத்தின் சுற்றறிக்கையில் தெரிவித்திருந்த ரூ.500-ஐ குறைந்த பட்ச ஊதிய உயர்வு நன்கொடையாக வைத்துக்கொண்டு, விரும்புபவர்கள் அதற்கு மேலும் நன்கொடையாக கொடுத்தால் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வோம்.

நமது சங்கத்தின் 2018-19-ம் ஆண்டிற்கான முதற்கட்ட கிளைப்பொறுப்பாளர்கள் தேர்தல் மத்திய சங்கம் அறிவித்த காலத்திற்குள் நடத்தி முடித்து தேர்தல் முடிவு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

2-வது கட்டமான வட்டக்குழு பொறுப்பாளர்கள் தேர்தல் இதுவரை 6 வட்டங்களில் நடத்தப்பட்டு முடிவு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. 20 வட்டங்களுக்கான வாக்காளர் பட்டியலும், மத்திய சங்கத்தின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அறிவித்தவாறு 31.03.2018-க்குள் வட்டக்குழு தேர்தல்களை முடித்து மத்திய சங்கத்திற்கு அறிக்கை வைத்திடுமாறு வேண்டுகிறோம்.

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர்.

கிளைச்செயலாளர்கள், கோட்டச்செயலாளர்கள்,

வட்டச்செயலாளர்கள்,வட்டத்தலைவர்கள்,

மண்டலச்செயலாளர்கள், மற்றும் மத்திய சங்கப்பொறுப்பாளர்கள்.